பக்கங்கள் 17+5

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 18 புதன்கிழமை 01.05.2024 அதிர்வு 273

## தென்மராட்சி விபத்தில் ஒருவர் பலி; ஐவர் காயம்

(எஸ்.நிதர்ஷன்)

CLICK HERE VIDEO

லாண்ட் மாஸ்ரர் மீது ஹயஸ் வான் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் ஐவர் காயமடைந்துள்ளனர்.

04



# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் 1,700 ரூபாவாக உயர்வு

## இ.தொ.காவின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் அதிரடி அறிவிப்பு





"பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை தான் ஒருபோதும் மறக்கவில்லை எனவும், ஜனாதிபதி என்ற வகையில் எதிர்காலத்தில் அவர்களின் உரிமைகளைத் தான் உறுதிப்படுத்துவேன் அவர் கூறினார்.

04

## கிளிநொச்சியில் உணர்வெழுச்சியுடன் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம்







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசிய மே தின ஊர்வலமும், மேடை நிகழ்வும் இன்று பிற்பகல் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மே தின நிகழ்வு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்,லோகதயாளன்)**

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய மே தின நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

“ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகளை உடைத்தெறிவோம்” எனும் தொனிப்பொருளில் இன்று காலை 9.30 மணியளவில் மானிப்பாய் தென் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் மே தின நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுத்தல் மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்த கருத்துரைகள் என்பன இடம்பெற்றன.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மே தினப் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்தன், ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சின் தலைவர் வேந்தன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.















# தலவாக்கலையில் திகாவின் மே தினக் கூட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் பங்கேற்பு



**(தலவாக்கலை நிருபர்)**

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தினக் கூட்டம் தலவாக்கலை நகர சபை மைதானத்தில் இன்று நடை பெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விசேட அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கலந்துக்கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க, தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார், தொழிலாளர் தேசிய சங்கத்தின் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஶ்ரீதரன், சரஸ்வதி சிவகுரு, பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.






# வெளிநாட்டில் இருந்து வந்த நபரை குறிவைத்து மூதூரில் துப்பாக்கிச்சூடு

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவெளி கிராமத்தில் நேற்றிரவு துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

ஆவா குழு எனத் தங்களை வெளிப் படுத்தி வரும் குழுவொன்றால் வெளிநாட் டில் இருந்து வருகை தந்துள்ள ஒருவ ரைக் கொலை செய்யும் நோக்கத் தோடு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதன்போது மேற்படி நபர் தப்பி யோடியுள்ளார். இது தொடர்பாக அந்த நபரால் மூதூர் பொலிஸ் நிலையத் தில் முறையிடப்பட்டுள்ளது. எனினும், இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை என்று முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் உதவியுடன் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட் டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பெருந்தோட்ட...

கொட்டகலை பொது மைதானத்தில் இன்று முற்பகல் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப் பிட்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிர ஸின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த நிகழ்வில் இணைந்துகொண்ட துடன், மைதானத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவரான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர்.

பெருந்திரளான மக்களின் பங்குபற்று தலுடன் மே தினக் கூட்டமும் பேரணியும் நடைபெற்றது.

மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மலையக மக்களால் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

“லயன் அறைகள் சட்டபூர்வமான கிராமங்களாக மாற்றப்பட்டு அவற் றின் வசதிகள் மேம்படுத்தப்படும். பெருந் தோட்டப் பிள்ளைகளின் கல்வி மற்றும் தொழில்சார் கல்வியை மேம்படுத்து வதற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

கடந்த கால பொருளாதார நெருக்கடி யின்போது பல்வேறு சிரமங்களை எதிர் கொண்ட போதிலும் நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்குப் பெருந்தோட்ட மக்கள் ஆற்றிய பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

நாங்கள் அனைவரும் மிகவும் கடின மான காலத்தைக் கடந்து வந்துள்ளோம். இதன்போது பெருந்தோட்ட மக்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர் என்பதை நாம் அறிவோம்.

ஆனால், சிரமங்கள் இருந்தபோதி லும், அவர்கள் தேயிலைக் கொழுந்து பறிப்பதன் மூலம் நாட்டின் தேசிய பொரு ளாதாரத்தை வலுப்படுத்த பங்களித்த னர். 2023 ஆம் ஆண்டிலும் 2024 ஆம் ஆண்டிலும் தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றோம். அதற்கு ஜனாதிபதி என்ற வகையில் நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

உங்களின் கடின உழைப்புத்தான் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத் தியது என்றே கூற வேண்டும்.

2022 இல் நாடு இருந்த நிலைக்கு மீண்டும் செல்வதை இங்குள்ள யாரும் விரும்பவில்லை என்று நினைக்கிறேன். அதற்கு நாங்கள் யாரும் தயாராக இல்லை. நாங்கள் மிகவும் மோசமான சூழ்நிலைக்குச் சென்றோம்.

தற்போது இந்த நாட்டின் பொருளா தாரத்தில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது. தற்போது அனைவருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின் றோம்.

அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயி ரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டது. மேலும், அஸ்வெசும திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் நிவாரணத்துக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தனியார் துறையினரும் சம்பளத்தை அதிகரித்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பால், சுற்றுலா வருமானமும் அதிகரித்துள்ளது. அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை நாம் மறக்கவில்லை.

இந்த லயன் அறைகளை சட்டபூர்வ மாக கிராமங்களாக அறிமுகப்படுத்த நானும் பிரதமரும் ஆலோசித்துள் ளோம். அதன் மூலம் இந்த இடங்களுக்கு கிராமங்களுக்கு கிடைக்கும் வசதிகள் கிடைக்கும்.

அதற்கான செயற்பாடுகளை அமைச் சர் ஜீவன் தொண்டமானுடன் இணைந்து தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த் துள்ளோம்.

அத்துடன் பெருந்தோட்டப் பிள்ளை களின் கல்வி முன்னேற்றம் தொடர் பிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கு விஞ்ஞானப் பாடங்களை கற்பிக்க தேவையான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நான் பிரதமராக இருந்த போது தோட்டங்களில் உள்ள பல பாடசாலை களில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஆரம்பித்தேன். சில பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையைத் தீர்த்து, அவற்றை மேம்படுத்தும் பணி யும் இடம்பெற்று வருகிறது. மேலும், பெருந்தோட்டங்களில் தொழிற்கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தோட்டத் தொழிலாளர்களை அர சாங்கம் என்ற ரீதியில் நாம் மறக்க வில்லை.அந்த மக்களின் அனைத் துப் பிரச்சினைகளையும் நான் புரிந்து கொண்டுள்ளேன்.

எனவே, எனக்குக் கீழ் தோட்டத் தொழி லாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத் தப்படும் என ஜனாதிபதி என்ற வகையில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

1982 ஆம் ஆண்டு சௌமிய மூர்த்தி தொண்டமானின் வேண்டு கோளுக்கிணங்க நான் அப்போதைய கல்வி அமைச்சராக பெருந்தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். பின்- னர் 1986 இல் குடியுரிமை இல்லாதவர்க ளுக்கு குடியுரிமை வழங்குவதாக ஜனா திபதி ஜே.ஆர். ஜயவர்தன அறிவித்த போது நானும் அதற்கு ஆதரவளித்தேன்.

2003 ஆம் ஆண்டில் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து இந்தி யாவில் குடியுரிமை இருந்தும் மீண்டும் அங்கு செல்ல விரும்பாத மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது.தற்போது அந்த பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விட்டன.

இப்போது இந்த பகுதிகளை முன் னேற்றுவதற்கான நேரம் இது. எனவே தான் சம்பளத்தை அதிகரித்து இந்தப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின் றோம். மேலும், விவசாய நவீனமய மாக்கல் திட்டம் கிராமத்துக்கு மட்டுமல்ல, பெருந்தோட்டத்துக்கும் கொண்டு வரப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.” - என்றார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோரும் இந்நிகழ் வில் உரையாற்றினார்கள்.

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீட், இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸ் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், பிரதித் தலைவி அனுஷியா சிவராஜா, பெருந் தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத் தின் தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### தென்மராட்சி...

இந்த விபத்து யாழ். தென்மராட்சி, ஏ - 9 பிரதான வீதி, நுணாவில் பகுதி யில் இன்று காலை 5:45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது லாண்ட் மாஸ்ரரில் பயணித்த ஐவரில் ஒருவர் உயிரிழந் துள்ளதுடன், மூவர் மோசமான காயங்க ளுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

ஹயஸ் வானில் பயணித்த சிறுமி ஒருவர் மற்றும் லாண்ட் மாஸ்ரர் சாரதி ஆகியோர் சிறு காயங்களுடன் சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து வெளிநாட்ட வர்களை ஏற்றிக்கொண்டு யாழ். நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வான் சாரதி நித்திரைத் தூக்கம் காரணமாக முன்னே பயணித்துக் கொண்டிருந்த லாண்ட் மாஸ்ரரின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் சாவகச் சேரி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.




# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினக் கூட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று காலை இடம்பெற்றது.

நல்லூர் ஆலயத்துக்கு அருகில் இருந்து ஆரம்பித்த பேரணி கிட்டு பூங்காவில் நிறைவடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இன்று கடக்கும் மே தினம்

மேதினியை மேம்படுத்தும் மேன்மக்களான தொழிலாளர்களையும் அவர்களின் உயர்வான உழைப்பையும் உவந்து போற்றும் தொழிலாளர் தினத்தை இன்று கடக்கின்றோம்.

நாடு முழுவதிலும் நாற்பதுக்கும் அதிகமான மே தின ஊர்வலங்களும் இருபதுக்கும் அதிகமான மே தின கொண்டாட்ட நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன என்று தேசியமட்ட செய்திகள் கூறுகின்றன.

இது தேர்தல் ஆண்டு என்பதால் மே தின நிகழ்வுகள் விசேட களை கட்டியிருக்கின்றன என்று கூறுவதும் சரிதான். கட்சிகளும் அமைப்புகளும் தங்கள் வலிமையை வெளிப்படுத்தும் ஒரு சோதனைக் களமாக இதனைப் பயன்படுத்துகின்றன.

தமிழ்க் கட்சிகள், அமைப்புகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் மலையகப் பகுதி எங்கும் பல மே தின நிகழ்வுகளை இம்முறை நடத்துவது சிறப்பு.

தொழிலாளர் நலனில் தமக்கு சிரத்தை உண்டோ, இல்லையோ தத்தமது அரசியல் நலனை முன்னிறுத்துவதில் தங்களின் அதீத கவனம் உண்டு என்பதை இதன் மூலம் அவை கரிசனையுடன் வெளிப்படுத்துகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி நடத்தும் மே தின நிகழ்வு இன்று பிற்பகலில் கொழும்பு மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெறுகின்றது.

முன்னதாக இன்று காலை மலையகத்தில் கொட்டகலை பொது விளையாட்டு அரங்கு மைதானத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு வட்டுகரை சதம் வீதியில் தனது மே தின நிகழ்வை நடத்துகின்றது. அந்தக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் தந்தையார் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவு தினம் இன்றாகும். இதே போல ஒரு மேதின ஊர்வலத்தின் போதுதான் தற்கொலை குண்டு தாக்குதலில் ரணசிங்க பிரேமதாஸ உயிரிழந்தார். அதனால் இன்றைய மே தினம் அக்கட்சிக்கு முக்கியமானது. அடுத்து அதிகாரத்துக்கு வரும் பகீரதப் பிரயாத்தனத்தில் கடுமையாக உழைக்கும் சஜித் பிரேமதாஸ அதற்கான உந்துவிசைப் பலகையாக இன்றைய மே தின நிகழ்வையும் பயன்படுத்துகின்றார் என்பது கண்கூடு.

பொதுஜன பெரமுனவின் மே தின நிகழ்வு கொழும்பு கம்பல் பார்க்கில் இன்று நடைபெறுகிறது. ராஜபக்ஷக்களின் பிரசன்னம் அங்கு பெரும் கலகலப்பை ஏற்படுத்தும்.

ஜே.வி.பியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும் அநுராதபுரம் ஆகிய நான்கு இடங்களில் ஒரே சமயத்தில் மே தினக் கூட்டங்களை நடத்துகின்றது.

கம்பஹாவில் நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தின நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

உழைக்கும் தொழிலாளர் தினமான இன்று பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளம் வழங்கும் வர்த்தமானி அறிவித்தல் பற்றிய செய்தி வெளியாகியமை வரவேற்கத்தக்க அம்சம்தான். ஆனால் அரசு எடுத்திருக்கும் இந்த ஒருதலைப்பட்ச முடிவு தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமானதா என்ற கேள்வி எழாமல் இல்லை.

ஊதிய சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தொழில் அமைச்சரின் உத்தரவின் மூலம், தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்கீழ் இது செய்யப்பட்டுள்ளது.

இதைக் காரணம் காட்டி இதுவரை காலமும் தொழிற்சங்கங்களுடன் தான் சேர்ந்து செய்து கொண்ட கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளில் இருந்து முதலாளிமார் சம்மேளனம் வெளியேறுவது தவிர்க்க முடியாததாகும். அதனால் தொழிலாளர்கள் இதுவரை பெற்ற பல சலுகைகள், வசதிகளை இழந்து புதிய நெருக்குவாரங்களைச் சந்திக்கும் ஆபத்தும் உண்டு.

தினசரி கட்டாயப் பணி நேரம், மாதாந்தம் இத்தனை நாள் வேலை என்ற கட்டாயம் இல்லாமல் போதல், பறிக்கும் கொழுந்தின் அளவு பற்றிய நிபந்தனைகள் என்று பல சிக்கல்கள் புதிது புதிதாக வரலாம்.

மே தினத்தன்று வழங்கப்பட்ட இந்த அறிவிப்பின் விளைவு குறித்து இனித்தான் மெல்ல மெல்ல தெரிய வரும்.



# புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின ஊர்வலம்

(கே.வசந்தன்)

”உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம்! நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம்!!” – எனும் தொனிப்பொருளில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலமும், பொதுக்கூட்டமும் இன்று காலை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய மே தின ஊர்வலம் பஜார்வீதி ஊடாக வவுனியா நகர மண்டபத்தை அடைந்தது. அங்கு பிரதான மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

















# உழைக்கும் மக்கள் அனைவரதும் உரிமைகளை நிலை நிறுத்துவோம்!

## ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் தீர்மானம் நிறைவேற்றம்!!



அரசின் அனைத்து அடக்கு முறைகளுக்கும் எதிராக அணி திரள்வோம், உழைக்கும் மக்கள் அனைவரது உரிமைகளையும் நிலை நிறுத்துவோம் போன்ற தீர்மானங்கள் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் 2024ஆம் ஆண்டு மே தினத்தில நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் மே தினதி தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

நாட்டின் பொருளாதார வங்குரோத்துக்குக் காரணமாக அமைந்த தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியமையும் அநாவசியமாக பல்லாண்டு காலமாக ஒரு யுத்தத்தை நடத்தியமையும் அந்த யுத்தத்தை நடத்துவதற்கு அரசு உருவாக்கிய பயங்கரவாத தடைச் சட்டம் யுத்தம் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகள் கழிந்த பின்னரும் இன்னமும் நடைமுறையில் இருப்பதானது மக்களின் அடிப்படை உரிமைகளை தொடர்ந்தும் மீறும் ஒரு செயற்பாடாகும்.

அதேபோல் யுத்தத்தின் காரணமாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான பொது மக்கள் தொடர்பாக அரசு எந்தவித காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்காமையானதும் மிகுந்த விசனத்தை ஏற்படுத்துகிறது. அரசின் தமிழர் விரோத போக்கையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

அரசின் இந்த நடவடிக்கைகளை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வன்மையாகக் கண்கிறது. இவற்றுக்கு உரிய தீர்வை அரசு காணவேண்டும்.

வட கடலில் பாக்கு நீரிணையிலும் மன்னார் வளைகுடாவிலும் தமிழக மீனவர்களுக்கும், வடபுல மீனவர்களுக்கும் இடையில் மீன்பிடி தொடர்பாக தொடர்ச்சியான சர்ச்சைகள் ஏற்பட்டு வருகின்றன. மீனவர்களின் படகுகள் சேதமாக்கப்படுகின்றன். வலைகள் அறுக்கப்படுகின்றன. லட்சக் கணக்கான பெறுமதி வாய்ந்த சொத்துகள் கடலில் நிர்மூலமாக்கப்படுகின்றன.

அதே சமயம் நாளாந்தம் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவதும் நீதிமன்றங்களால் அவர்களது படகுகள் அரசுடையாக்கப்படுவதும் தொடர்கதையாகி வருகின்றது.

இவை நிறுத்தப்படவேண்டும். இதற்கு ஏற்ப இந்திய அரசும் இலங்கை அரசும் மீனவ தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்ட இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு விரைந்து செயற்படவேண்டும்.

கடந்த சில வருடங்களாக இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவுகளாலும் வறட்சியாலும் சில இடங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாகவும் தவறான உரக்கொள்கையாலும் தற்பொழுது தெங்கு செய்கையில் ஏற்பட்டுவரும் நோய் காரணமாகவும் விவசாயிகள் தமது ஜீவனோபாயத்தையே முற்றுமுழுதாக இழந்து நிற்கிறார்கள்.

விவசாயிகளின் விளைச்சலுக்கு உரிய நிர்ணய விலை கிடைக்காமையாலும் விவசாயிகள் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளனர். எனவே விவசாயிகளுக்கான உரம் மற்றும் கிருமிநாசினிகளை தேவையான அளவுக்கு மானிய அடிப்படையில் வழங்குவதுடன் விவசாயிகளின் கடன்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நுண் நிதிக்கடன் வழங்கும் நிறுவனங்கள் அப்பாவிப் பெண்களிடம் மிகப் பெருமளவிலான வட்டியை அறவிடுவதோடு நிதியை மீளச் செலுத்துகையில் காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் அந்த நிறுவனங்களால் பெண்கள் குறிப்பாகக் குடும்பத்தை தலைமையேற்று நடத்தும் பெண்கள் பாலியல் தொல்லை உட்பட பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதுடன் தற்கொலை செய்து கொள்வதற்கும் தூண்டப்படுகின்றனர்.

இத்தகைய நுண்நிதிக் கடன் நிறுவனங்களைத் தடைசெய்வதுடன் உழைக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான நிதியை இலகு தவணை அடிப்படையில் வழங்க அரசு முன்வரவேண்டும்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் பணவீக்கமும் வாழ்க்கை செலவுக்கு ஏற்ப கொடுப்பனவுகள் இல்லாமையும் தொழிலாளர், விவசாயிகளைப் பலமடங்கு பாதித்திருக்கிறது.

வறுமைக் கோட்டுக்குக் கீழிருப்போர் பல மடங்கு உயர்ந்திருப்பதாக ஐ.நா. புள்ளி விவரங்கள் கூறுகின்றது. அரச வருவாயை கூட்டுவதற்காக வரிகள் அதிகரிக்கப்படுவதும் விலைகள் உயர்த்தப்படுவதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

வறிய மக்களின் மூன்று வேளை உணவுக்கு உத்தரவாதமில்லாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டுக்குக் கீழிருக்கும் அனைவருக்கும் கல்வி, சுகாதாரம், போஷாக்கு உணவு உள்ளிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் பொதுவான பொருளாதர உதவித் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

அரசின் தவறான கொள்கைகளின் காரணமாக நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது மாத்திரமல்லாமல், இலஞ்சம் ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடு காரணமாக அரச இயந்திரமும் முற்றுமுழுதாகச் சீர்குலைந்திருக்கிறது. இவற்றுக்குக் எதிரான மக்களின் குரல்களையும் தொழிற்சங்கங்களின் குரல்களையும் பொது அமைப்புகளின் குரல்களையும் அடக்குவதற்காக தொடர்ச்சியாக பல்வேறு அடக்குமுறை சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

இவற்றை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது. தொழிற்சங்கங்களும் பொது நிறுவனங்களும் சுதந்திரமாக இயங்குவதற்கும் தமது கோரிக்கைகளுக்காகப் போராடுவதற்கான உரிமைகள் உத்தரவாதம் செய்யப்படவேண்டும்.

அரசாங்கத்தின் நான்காவது தூணாகவும் ஜனநாயகத்தின் காவலனாகவும் திகழ்கின்ற ஊடகத்துறைக்கு எதிராக அரசு புதிய புதிய சட்டங்கள் ஊடாக அவற்றைக் கட்டுப்படுத்த முயற்சித்து வருகின்றது. இணைய தளங்கள் சமூக வலைத் தளங்கள், அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் போன்றவை சுதந்திரமாகவும் பக்கசார்பற்றும் இயங்கக் கூடிய வகையிலும் அவற்றின் சுயாதீனச் செயற்பாடுகள் தடையின்றி செயற்படும் வகையிலும் அரச அடக்குமுறைச் சட்டங்கள் அகற்றப்படவேண்டும்.

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் என்பது தமிழ் பேசும் மக்களின் மரபு வழித் தாயகமாக இருந்து வருகின்றது. குடிசனப் பரம்பல்களை மாற்றியும் கலாசார ஊடுருவல்களை ஏற்படுத்தியும் அங்கு வாழும் மக்களின் மொழி, கலாசார, பண்பாடு மற்றும் பொருளாதார வளங்களை சீரழிக்காமல் காலாதிகாலமாக வாழ்ந்துவரும் மக்களின் மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய வகையில் அரசு செயற்படவேண்டும்.-என்றுள்ளது.

# வடமராட்சியில் ஈ.பி.டி.பி.யின் மே தினப் பேரணி







ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தினப் பேரணி வடமராட்சியில் இன்று நடைபெற்றது. இதில் கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை ஒற்றுமையாக நியமிக்க வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க தலைவி ஜெனிற்றா தெரிவிப்பு




(கே.வசந்தன்)

ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிக்க எல்லோரும் ஒற்றுமையாக இணைந்து ஏகமனதாக சரியான தெரிவை மேற்கொள்ள வேண்டும் என்று வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க தலைவி சி.ஜெனிற்றா தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க தலைவி ச.ஜெனிற்றா நேற்று (30) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாளைய தினம் (இன்று) தொழிலாளர் தினமாகும். தொழிலில் ஈடுபட்டு எங்களது உறவுகளைக் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டதால் நாங்கள் அவர்களைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். தற்போது உழைப்பாளி என்ற வர்க்கத்தில்நாங்கள் இல்லாமல்கையேந்தும் வர்க்கத்தில் உள்ளோம். எங்களது உறவுகளை மீண்டும் எமக்கு திருப்பித் தர வேண்டும் என்பதற்காகவே போராடிக் கொண்டிருக்கிறோம்.

எமக்கான நீதியைப் பெற்றுத் தராமல் சர்வதேசமும் தொடர்ச்சியாக எங்களை ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கின்றது. என்றாலும் கூட எங்களது உறவுகளுக்கான சர்வதேச நீதியை பெற்று தர வேண்டும்.

அத்தோடு எமது உரிமைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்பதே எங்களது குறிக்கோளாக உள்ளது. தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிக்க எல்லோரும் ஒற்றுமையாக இணைந்து ஏகமனதாக சரியான தெரிவை மேற்கொள்ள வேண்டும்.– என்றார்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# மே தினத்தை முன்னிட்டு மூடப்பட்ட கல்முனை சந்தை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மாநகர பொதுச் சந்தை தொழிலாளர்களை கௌரவப்படுத்தும் வகையிலும் உலக தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் வகையிலும் இன்று (01) முழுமையாக மூடப்பட்டது.

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இவ்வாறு வர்த்தகர்கள் அனைவரும் கடைகளை மூடி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதாக தீர்மானித்திருந்தனர் என்று பொதுச் சந்தை வர்த்தக சங்கச் செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.




## 25வருடங்களாகப் புனரமைக்கப்படாத வீதி

# மாணவனின் கோரிக்கையை அடுத்து காப்பெட் வீதியாகத் திருத்தப்பட்டது!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கச்சக்கொடித் தீவு சந்தியில் இருந்து மகமாரு வரையான வீதி சுமார் 25 வருட காலமாக குன்றும் குழியுமாகப் போக்குவரத்துச் செய்யப்படாத நிலை காணப்பட்டது.

இதனை கருத்தில் கொண்டு மகமாரு பகுதியில் வசிக்கும் மாணவனான ஏ.எச்.நவீத் எனும் கிண்ணியா மத்திய கல்லூரி மாணவன், ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக இந்த விதியைத் திருத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனைக் கருத்தில் கொண்ட ஜனாதிபதி செயலகம், அந்த மாணவனுக்குப் பதில் அனுப்பி வைத்தது.

அதனை அடுத்து உரிய அதிகாரிகள் ஊடாக அந்த வீதி காப்பெற் வீதியாகச் செப்பனிடப்பட்டது. குறித்த வீதியானது சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி ஊடாகப் பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் என பலர் நாளாந்தம் பயணம் செய்கின்றனர்.

இவ் வீதியூடாகக் கல்லடிவெட்டுவான், குரங்குபாஞ்சான், சுண்டியாறு என பல கிராமங்களுக்கு சென்று விவசாய நடவடிக்கைக்காக பயன்படுத்தும் நிலை இங்கு காணப்படுகிறது.

இதனால் குறித்த பகுதி மக்கள் ஜனாதிபதிக்கு தங்களது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.



# மலையகப் பெருந்தோட்டங்களில் மே தின நிகழ்வுகள் அனுஷ்டிப்பு





(ஆ.ரமேஸ்)

தொழிலாளர் தினமான மே தின நிகழ்வு இன்று மே முதலாம் திகதி மலையக பெருந்தோட்டங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பெருந் தோட்டப்பகுதிகளில் தாம் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கங்களை சார்ந்த தொழிலாளர்கள் தோட்ட ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுப்பட்டு ஆலயங்களுக்கு முன்னால் கட்சி கொடிகளை கம்பங்களில் ஏற்றிப் பறக்கவிட்டனர்.

லிந்துலை அகரகந்தை தோட்டம் மற்றும் கந்தப்பளை பார்க் தோட்டங்களில் இடம்பெற்ற மே தின நிகழ்வுகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களான அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரின் உருவ படங்களுக்கு பூசைகள் செய்யப்பட்டு காங்கிரஸ் கொடிக்கு பொட்டு வைத்து கம்பத்தில் ஏற்றப்பட்டது.

# 346 கிலோ பீடி இலைகளுடன் கற்பிட்டியில் நான்கு பேர் கைது!

## 70 லட்சம் ரூபா பெறுமதியானது என்று தெரிவிப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம். சியாஜ் )

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட எழுபது லட்சம் ரூபா பெறுமதியான 1346 கிலோ பீடி இலைகளுடன் நான்கு சந்தேக நபர்கள் நேற்று (30) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் 70 லட்சம் பெறுமதியான 42 பொதி செய்யப்பட்ட பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்



றைக் கடல் மார்க்கமாக ஏற்றிச் சென்ற படகு, தரைவழி போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட லொறி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய சாரதி , கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன், ஜனசவிபுர பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய இரண்டு இளைஞர்கள் ஆகியோர் கைதானவர்களில் அடங்குவர்.

காலம் காலமாக இந்தியாவில் இருந்து கற்பிட்டி கடல் வழியாகப் பீடி இலைகள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதன் காரணமாக ஆண்டுக்கு கோடிக் கணக்கான சுங்க வரிகளை நாடு இழக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது .



# வீதி அபிவிருத்தித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கிண்ணியா பிரதேசத்துக்கான ஒருங்கிணைப்பு குழு தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அத்தாவுல்லாவின் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் கிண்ணியா பிரதேசத்துக்கு 21 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட உப்பாறு மீள்குடியேற்ற பிரதேச உட்கட்டமைப்பு வீதி அபிவிருத்திக்காக 1.4 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தி வேலைத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா பிரதேசத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அத்தாவுல்லாவின் தலைமையில் உப்பாறு பிரதேசத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம். எச்.எம். கனி, கிண்ணியா பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிட்டல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா இருநாள்களுக்கு




பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி என்பன இணைந்து யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி சரஸ்வதி அரங்கில் நூற்றாண்டு விழாவை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரையிலும், மறுநாள் 12 ஆம் திகதி காலை 09 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையில் விழா நடைபெறவுள்ளது.

நூற்றாண்டு விழாவின் இரு நாள் நிகழ்வுகளிலும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கலாநிதி கமலநாதன் யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அழைப்பு விடுத்துள்ளார்.



# மட்டக்களப்பு எம்.பி. மௌலானாவுடன் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சந்திப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரு பற்றிக், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவுடன் விசேட சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பு ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள், விவசாயம், மீன்பிடி மற்றும் குடியிருப்புக் காணி உள்ளிட்ட பல விவகாரங்களில் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் போன்றவை நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா முஸ்லிம் சமூகத்தின் சார்பில் பிரித்தானிய தூதுவரிடம் எடுத்து கூறினார்.

முஸ்லிம்களின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப காணி பகிர்வு இடம்பெறாமல் பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும், பல பகுதிகளில் பாதுகாப்பு தரப்பினர் தம் வசம் உள்ள பொது மற்றும் தனியார் காணிகளை இணக்க அடிப்படையில் விடுவிக்கும் நிலையில் எதிர்கால சந்ததிகளான பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

கல்குடா தேர்தல் தொகுதியில் கோறளை மத்தி செயலகப் பிரிவு முதலான பகுதிகளில் எல்லை நிர்ணயம், காணி விவகாரம் தொடர்பாக ஆணைக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்ட விடயங்கள் கூட பல வருடங்கள் கடந்தும் அமுல்படுத்தபடாமல் கல்குடா முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விடயங்களைக் கேட்டறிந்து கொண்ட உயர்ஸ்தானிகர் அன்று பற்றிக் தன்னிடம் முன் வைக்கப்பட்ட விடயங்களை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் அழுத்தங்களை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

சந்திப்பில் ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் மற்றும் உலமா சபை ஏறாவூர் கிளை, வர்த்தக சங்கம் உட்பட பொது நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.





# சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் ஏற்பாட்டில் மே தினக்கொண்டாட்டம்

(எஸ்.அஷ்ரப்கான், றியாஸ் ஆதம்)

சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் ஏற்பாடு செய்திருந்த மே தினக் கொண்டாட்டம் அட்டாளைச்சேனை சந்தை சதுக்கத்தில் இடம்பெற்றது.

போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடவியலாளருமான எம்.எஸ்.எம். ஜஃபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், விசேட அதிதியாக அக்கரைப்பற்று ஹல்வானி பேக்கரியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் தொழிலதிபருமான எஸ்.ஏ.எம்.சித்தீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் விசேட துஆ பிரார்த்தனை மற்றும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. பயன்தரும் மரங்கள், கற்றாளைக் கன்றுகள் வழங்கப்பட்டன.

# அக்கரைப்பற்றில் மே தின ஊர்வலம்




**(எம்.எப். றிபாஸ்)**

அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியனின் மே தின நிகழ்வு யூனியனின் தலைவர் எம். எச்.ஜெயினுடின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அக்கரைப்பற்று பிரதான வீதியூடாக ஊர்வலம் மணிக்கூட்டு சந்திவரை சென்றது.

# மே தின நிகழ்வு சாய்ந்தமருதில்!








**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது – மாளிகைக்காடு வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்த உழைப்பாளிகளை கௌரவிக்கும் மே தின நிகழ்வு வர்த்தக சங்க தலைவர் கலாநிதி எம்.எஸ்.எம். முபாறக் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக முன்றலில் இன்று (01) இடம்பெற்றது.

இன்று முழுநாளும் தொழிலாளிகளை கொண்டாடும் கௌரவிக்கும் இன்றைய நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.எம். சம்சுதீன், சிரேஷ்ட வர்த்தகர் ஆதம்பாவா மீராசாஹிப், சிரேஷ்ட கல்விமான் ஏ.எல்.எம்.பஷீர், சாய்ந்தமருது – மாளிகைக்காடு வர்த்தக சங்க நிர்வாகிகள், வர்த்தகர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சுகாதார பிரிவின் ஊழியர்கள், திண்மக்கழிவகற்றல் பிரிவின் ஊழியர்கள் சகலருக்கும் அவர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையை பாராட்டி இதன்போது பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பொத்துவில் பிரதேசத்தில் இன்று முழுநாளும் தொழிலாளிகளை கௌரவிக்கும் வகையில் சாய்ந்தமருது– மாளிகைக்காடு வர்த்தக சங்கம் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யப்பட்டன.

# மே தினத்தில் என்றாலும் விமோசனம் கிடைக்குமா?

## பெண் தொழிலாளர்கள் ஆதங்கம்





(எச்.எம். ஹலால்தீன்)

திருகோணமலை தம்பலகாமம் பத்தினி புரக் கிராமத்தில் பனை ஓலை கைத்தொழிலில் 48 பெண் தொழிலாளர்கள் இன்றும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தொழில் ரீதியாக பல் வேறு சிரமங்களுக்கு மத்தியில் தாம் தொழில் செய்து வருகின்றனர் என்று கூறுகின்றனர்.

இந்தத் தொழிலாளர் தினத்திலாவது தமக்கு விமோசனம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

பத்தினிபுரம் பனையோலை சார்ந்த உற்பத்திக் கிராமம். இந்தப் பிரதேச பெண்களின் நலன் கருதி உற்பத்தி நிலையம் மூன்று வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது.

பிரம்புகள், பித்தளை, மட்பாண்ட, மரப் பொருள்கள் மற்றும் கிராமிய கைத் தொழில் மேம்பாட்டு ராஜாங்க அமைச்சின் உதவியுடன் இந்தக் கிராம பெண்களின் நலன் கருதி திறந்து வைக்கப்பட்டது.

எனினும் போதிய வருமானம் பனை ஓலை இல்லாமல் உற்பத்தி பொருள்களின் விலையில் ஏற்படும் மாற்றம் என்பன நமது வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று தெரிவிக்கின்றனர்.

இந்த மே தினத்திலாவது எமக்கு விமோசனம் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 25 வருட காலமாக இந்தப் பனை ஓலை கைத்தொழில் செய்து வருகிறோம். 48 பேர் வேலை செய்கின்றோம்.

பெண்கள் சுய தொழிலாக செய்து கொண்டு வருகின்றார்கள். ஆனால் பனைமரம் இருக்கின்றது. பனை ஓலை வெட்டுவதற்கு ஆள்கள் இல்லை. மழை காலங்களில் வருமானம் வருவதில்லை

இந்த மே தினம் தொழிலாளர் தினமாக இருந்தும் நாங்கள் போதிய தொழல் வசதி இன்றி எங்கள் வருமானத்தை கூட்டுவதற்காக தொழில் செய்து வருகின்றோம்.

இந்தத் தொழில் கணவனை இழந்தவர்கள் மற்றும் விதவைகளால் செய்யப்படுகிறது.

அரசு எமது தொழில் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# வவுனியா கணேசபுரத்தில் வீடுக்குள் நுழைந்த முதலை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வவுனியா கணேசபுரத்தில் 8 அடி நீளமான முதலை ஒன்று வீடொன்றுக்குள் புகுந்துள்ளது.

இதனால் அச்சமடைந்த வீட்டு உரிமையாளர் அயலவர்களின் உதவியுடன் அதனை வீட்டை விட்டு வெளியேற்றியுள்ளனர்.

பின்னர் வவுனியா வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அதனை பிடித்துச் சென்றனர்.



# விருதுநகர் கல்குவாரியில் வெடி விபத்து; 3 பேர் பலி!

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே உள்ள கல்குவாரியில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 3 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே ஆவியூர் பகுதியில் உள்ள கடம்பன்குளத்தில் ஆவியூரைச் சேர்ந்த சேது மற்றும் ராஜபாளையத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் ஆகியோருக்கு சொந்தமான குவாரி மற்றும் கிர்ஷர் இயங்கி வருகிறது. வழக்கம் போல இன்று காலை தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது குவாரியில் இருந்த வெடி மருந்து குடோனில் வெடிபொருள்களை வானில் இருந்து இறக்கி வைத்துக் கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் வெடிபொருள்களில் உராய்வு ஏற்பட்டு பலத்த சத்தத்துடன் வெடித்தது.

இந்த வெடி விபத்தில் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த டி. புதுப்பட்டியைச் சேர்ந்த கந்தசாமி (வயது 47), கோவில்பட்டி பகுதியைச் சேர்ந்த துரை (வயது 25), குருசாமி (வயது 60) ஆகிய மூவரும் உடல் சிதறி உயிரிழந்தனர்.

சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை உயிரிழந்தவர்களின் உடல் பாகங்கள் சிதறி கிடக்கின்றன. மேலும், வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்த குடோன் முழுவதுமாக தரைமட்டமானது. இதே போல் வெடிபொருள்கள் கொண்டுவந்த வான் இந்த விபத்தில் சேதமடைந்துள்ளது. சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை வெடிபொருள்கள் வெடித்த சத்தம் கேட்டதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளார். தற்போது வெடி விபத்தின் சி.சி.டி.வி. காட்சிகள் வெளியாகி உள்ளன.

ஆவியூர் பொலிஸார் சம்பவ இடத்தில் சோதனை நடத்தி வருகின்றனர். மதுரையில் இருந்து வந்த வெடிகுண்டு தடுப்பு பிரிவு பொலிஸார், சம்பவ இடத்தில் மேலும் வெடிபொருள்கள் இருக்கின்றதா, வெடி விபத்து நிகழ்ந்தது எப்படி என சோதனை நடத்தி வருகின்றனர்.

# வட தமிழக மாவட்டங்களில் 3 நாள்கள் வெப்ப அலை வீசும்

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

வட தமிழக உள் மாவட்டங்களில் 3 நாள்களுக்கு வெப்ப அலை வீசும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னையில் உள்ள மண்டல வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,


“தென் தமிழகம் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், மே 3 ஆம் திகதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்யக்கூடும். தமிழகத்தின் இதர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்.



மே 3 ஆம் திகதி வரை வடதமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும்.அங்கு சமவெளி பகுதிகளில் ஒரு சில இடங்களில் 102-109 டிகிரி ஃபாரன்ஹீட், இதர மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் 100-104 டிகிரி ஃபாரன்ஹீட், கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் 97-102 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை நிலவக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை வானம் இன்று ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 82 டிகிரி முதல் 102 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கக்கூடும்.

இந்த ஆண்டில் மார்ச், ஏப்ரல் மாதங்களை பொறுத்தவரை, வழக்கமான அளவைவிட 83 வீதம் குறைவான அளவு மழை பெய்துள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் மழைப்பொழிவு குறைந்துள்ளது.”- இவ்வாறு கூறப்பட்டுள்ளது.





# ஆப்கானிஸ்தான் பள்ளிவாசலில் துப்பாக்கிச் சூடு; பலர் உயிரிழப்பு!

ஆப்கானிஸ்தானின் கசாரா மாவட்டத்திலுள்ள ஷியா பள்ளிவாசலொன்றில் மர்ம நபர் ,நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார் என தலிபான் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தாக்குதல் நடாத்திய சந்தேகநபர் தப்பியோடியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் பள்ளிவாசலின் இமாம் ஒருவரும் அடங்குகின்றார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இந்த தாக்குதலை முன்னாள் ஜனாதிபதி ஹமித் கர்சாய் வன்மையாக கண்டித்துள்ளார்.

ஐ.எஸ். அமைப்பின்துணை அமைப்பு, ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்களுக்கு முக்கிய போட்டியாக வுள்ளது.

இந்த நிலையில்,பாடசாலைகள், வைத்தியசாலைகள், பள்ளிவாசல்கள் மற்றும் ஷியா மக்கள் அதிகம் உள்ள பகுதிகளை குறிவைத்து அடிக்கடி தாக்குதல் நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# காஸாவின் ரபா நகர் மீது விரைவில் படையெடுப்பு

## இஸ்ரேல் பிரதமர் சூளுரை

ஹமாஸ் உடனான போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் தெற்கு காஸா நகரமான ரபா மீது இஸ்ரேல் படையெடுப்பை நடத்தும் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

செவ்வாயன்று பேசிய பிரதமர் நெதன்யாகு, ரபாவில் இஸ்ரேல் தனது அனைத்து நோக்கங்களையும் அடையும் வரை போர் தொடரும் என்று வலியுறுத்தினார்.

“போரின் அனைத்து இலக்குகளையும் அடைவதற்கு முன்பு நாம் போரை நிறுத்துவோம் என்ற கேள்விக்கு இடமில்லை” என்றும் அவர் கூறி யுள்ளார்.

“நாங்கள் ரபாவிற்குள் நுழைவோம், மொத்த வெற்றியை அடைவதற்காக, நாங்கள் ஹமாஸ் பட்டாலியன்களை அகற்றுவோம்” என்று நெதன்யாகுவின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரபா நகரில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் அடைக்கலம் புகுந்துள்ள நிலையில், அங்கு இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தினால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

கனடா முரசு
பக்கங்கள் 05
புதன்கிழமை 01/05/2024

## மொத்த உள்நாட்டு அபிவிருத்தி ஜனவரி, பெப்ரவரியில் உயர்வு!

ஒன்ராரியோ, மே 01
கனடாவில் பெப்ரவரி மாதத் திற்கான மொத்த உள்நாட்டு அபி விருத்தி 0.2 சதவீதத்தால் அதிகரித் துள்ளதாக கனடிய புள்ளி C2



# போராட்டக்காரர்களின் கூடாரங்களை அகற்ற பொலிஸை நாடும் மெக்கில் பல்கலை நிர்வாகம்

கியூபெக், மே 01
மெக்கில் பல்கலைக்கழக வளாகத்தில் பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்கள் அமைத்துள்ள கூடாரங்களை அகற்றுவ தற்கு பொலிஸாரின் உதவியை பல்கலைக் கழக நிர்வாகம் கோரியுள்ளது.

அத்துடன், இந்தப் போராட்டத்தை நிறுத்துமாறு கோரி இரண்டு மாணவர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. C2

# பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலை மாணவர்கள் நீண்டகால இருப்புப் போராட்டத்துக்குத் தயார்

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 01
வென்கூவரில் அமைந்துள்ள பிரிட் டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்க ளின் கூடாரங்கள் நீண்ட கால இருப்புக்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படு கின்றது.

இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த கூடாரங்களில், நகரும் மலசல கூடங்கள், உணவு, உறங் கும் வசதிகள் என்பன தயார் செய்யப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆயத்தங்கள் போராட்டக்காரர் கள் நீண்ட காலம் இந்தப்பகுதியில் தங்கியிருக்கும் உத்தேசத்துடன் இருக் கின்றமையை வெளிப்படுத்துகின்றன எனச் செயற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர்.




இஸ்ரேல் நிறுவனங்களுடனான தொடர்பினை பல்கலைக்கழகம் நிறுத்த வேண்டும் எனவும், இஸ்ரேல் பல்கலைக் கழகங்களுடனான கல்விப் புறக்கணிப்பை முன்னெடுக்க வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

# டொரன்டோ பல்கலை வளாகத்தில் கூடாரங்களுக்கு அனுமதி இல்லை

## நிர்வாகம் முன்னெச்சரிக்கை அறிவிப்பு


ஒன்ராரியோ, மே 01

டொரன்டோ பல்கலைக்கழக வளாகத்தில் கூடாரங்கள் அமைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

பேச்சுச் சுதந்திரம் மற்றும் சட்டரீதியான, அமைதியான போராட்டங்களை மதிக்கும் அதேவேளை, அனுமதியற்ற செயற்பாடுகளை பல்கலைக்கழக நிர்வாகம் பொறுத்துக்கொள்ளாது என அது தெரிவித்துள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தகுந்த விளைவுகளை எதிர்கொள்வார்கள் எனவும் பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களுக்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் சுட்டிக்காட்டியுள்ளது.



# 2026 உலகக் கிண்ண உதைபந்தாட்டம் செலவுத் தொகை இரண்டு மடங்காகியது

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 01

2026ஆம் ஆண்டில் வென்கூவரில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கான உத்தேச செலவு கடந்த இரண்டு வருடங்களில் இருமடங்காகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நகர, மாகாண மற்றும் உதைபந்தாட்ட மைதானங்களில் மேம்படுத்தல் உள்ளடங்கலாக உத்தேச செலவானது 483 மில்லியன் டொலர்கள் முதல் 581 மில்லியன் டொலர்கள் வரை இருக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது 100 மில்லியன் டொலர்கள் முதல் 150 மில்லியன் டொலர்கள் வரை வருமானம் ஈட்டக்கூடியது என மாகாண அரசாங்கம் கணித்துள்ளது. 2022ஆம் ஆண்டில் இதற்கான உத்தேச தொகை 260 மில்லியன் டொலர்களாக கணிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### போராட்டக்காரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக வளாகத்தில் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் போராட்டக்காரர்கள் வைத்துள்ள பதாகையில் 'நீங்கள் இனப்படுகொலைக்கு நிதி வழங்குகின்றீர்கள்' என எழுதப்பட்டுள்ளது.

மின்னஞ்சல் ஊடாக ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாகம் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தக் கோரிக்கை தமக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், இதற்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்து ஆலோசித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

'இனப்படுகொலையில் இருந்து பயன்பெறும்' நிறுவனங்கள் எனப் போராட்டக்காரர்கள் குறிப்பிடும் அமைப்புக்களில் இருந்து விலகும் வரை தமது கூடாரங்கள் அகற்றப்படமாட்டாது என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களும், செயற்பாட்டாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போராட்டத்திற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள மாணவர்கள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி, போராட்டம் இன்றி பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கு இந்த மாணவர்கள் விரும்புகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### மொத்த உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் பதிவான 0.5 சதவீத அதிகரிப்பினைத் தொடர்ந்து இந்த வளர்ச்சி பதிவாகியுள்ளது.

எனினும், மார்ச் மாதத்தில் இந்த அளவில் எந்தவிதமான அதிகரிப்பும் பதிவாகவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரியில் இந்த அதிகரிப்பானது, சேவைகளை உற்பத்தி செய்யும் தொழில்கள் 0.2 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தமையின் விளைவாக ஏற்பட்டது என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.



# எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவேர் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றம்

## சபாநாயகர் கிரெக் பெர்கஸ் நடவடிக்கை



ஒன்ராரியோ, மே 01

எதிர்க்கட்சித் தலைவர் நாடாளு மன்றத்தில் இருந்து சபாநாயகரால் வெளியேற்றப்பட்டார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை நாடாளுமன்ற நிலையியற் சட்டங்களை மீறும் வகையில் தவறான வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தி விளித் தமைக்காக, அந்தக் கூற்றினை மீளப்பெறுமாறு சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவரை பல முறை கோரிய போதிலும், எதிர்க்கட்சித் தலைவர் மீளப் பெறுவதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாக அவரை அமர்வுகளில் வெளியேற்றுவதாக சபாநாயகர் கிரெக் பெர்கஸ் தெரிவித்தார்.

'இனவாதியாக தமது ஆரம்ப இளம் பருவத்தை கழித்தவர்' என ட்ரூடோவை எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவேர் விளக்கினார்.

இந்த வாரத்தைப் பிரயோகத்தை மீளப்பெறுமாறு பல முறை சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரினார்.

அது மறுக்கப்பட்டமையையடுத்தே நாடாளுமன்றத்தில் இருந்து அவரை சபாநாயகர் வெளியேற்றினார்.

'வெட்கப்படக்கூடிய, முதுகெலும்பில் லாத தலைமை எவ்வாறு இருக்கும் என்பதனை எதிர்க்கட்சித் தலைவர் காட்டுகிறார்' எனப் பிரதமர் இதனை விவரித்தமையை அடுத்து, சபாநாயகர் பிரதமரையும் எச்சரித்தமை குறிப்பிடத் தக்கது.

# மூலதன வருமான வரிவிதிப்புக்கு தனியான சட்டமூலம் வருகின்றது



ஒன்ராரியோ, மே 01

மூலதன வருமான வரிவிதிப்புக்கான முன்வைக்கப்பட்ட திருத்தங்களை அங்கீகரிக்குமாறு தனியானதொரு சட்டமூலத்தின் ஊடாக நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் கோரவுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த புதிய திருத்தமானது கடந்த மாதம் நிதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட ஆரம்ப வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது, மூலதன வருமானத்தில் அல்லது பங்குகள், இரண்டாம் நிலை உடைமைகள் உள்ளடங்கலாக சொத்துக்கள் விற்பனையில் பெறப்பட்ட இலாபத்தில் 50 சதவீத வரியை அரசாங்கம் அறவிடுகின்றது.

இதனை மூன்றில் இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கு நிதியமைச்சர் ஆலோசனை முன்வைத்துள்ளார்.

# காஸா விவகாரப் போராட்டங்கள் கனடாவில் எல்லை மீறியுள்ளனவாம்!

## நீதியமைச்சர் வீடு வரை வந்துவிட்டது

ஒன்ராரியோ,மே01

இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தம் தொடர்பான அண்மைக்கால போராட்டங்கள் கனடாவில் எல்லை மீறியுள்ளன என நீதியமைச்சர் ஆரிப் விரானி தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சரின் இல்லத்திற்குச் சென்ற பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரரக்கள், கொடிகளை அசைத்தும், கோஷங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டரீதியான மற்றும் அமைதியான போராட்டத்திற்கான உரிமையை தாம் மதிக்கின்ற போதிலும், மனைவியும், பிள்ளைகளும் இருக்கும் நேரத்தில் வீட்டிற்குச் சென்று போராட்டம் செய்வது எல்லை கடந்த செயல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.






# நெடுஞ்சாலை 413இற்கான நிர்மாணப் பணி 2025 இல் ஆரம்பிக்கும் என்கிறார் முதல்வர்!

ஒன்ராரியோ, மே 01

2025ஆம் ஆண்டில் நெடுஞ்சாலை 413இற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கும் என ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

களப் பணிகள் மற்றும் காணியை கண்டறியும் பணிகள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக கெலடோன் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் முதல்வர் ஃபோர்ட் தெரிவித்தார்.

ஆறு ஒழுங்கைகளைக் கொண்ட 52 கிலோமீற்றர் நீளமான இந்த நெடுஞ்சாலை ஃபோர்ட்டின் தேர்தல் உறுதிமொழிகளில் பிரதானமானதாகும்.

எனினும், சுற்றுச்சூழல் காரணங்களால் மத்திய அரசாங்கம் இதனை தாமதப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் மாத ஆரம்பத்தில் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கு இடையில் இது தொடர்பிலான இணக்கப்பாடு காணப்பட்டதையடுத்து, நெடுஞசாலை 413இன் நிர்மாணப் பணிகளில் மாகாண அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.



# டொரன்டோ நெடுஞ்சாலை விபத்தில் குழந்தை உட்பட நான்கு பேர் மரணம்

ஒன்ராரியோ, மே 01


டொரன்டோவில் நெடுஞ்சாலை 401இல் இடம்பெற்ற விபத்தில் குழந்தை உள்ளடங்கலாக நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

மதுபான சாலையில் கொள்ளையிட்ட சந்தேகநபர் நெடுஞ்சாலையில் தவறான வழியில் பயணித்தமையைத் தொடர்ந்து பல வாகனங்கள் மோதி ஏற்பட்ட விபத்திலேயே நால்வர் உயிரிழந்தனர்.

டொரன்டோவின் கிழக்கே 50 கிலோமீற்றர்கள் தொலைவில் விட்பீ அருகே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சந்கேநபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அத்துடன், விபத்துக்குள்ளான வாகனங்களில் ஒன்றில் இருந்த பேரப்பிள்ளையுடன், வயதானவர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

# மரண அறிவித்தல்



# மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன்

## (மா.க.ஈழவேந்தன்)

யாழ்.கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன் (மா.க.ஈழவேந்தன்) 28.04.2024அன்று ரொரன்ரோவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் கனகசபாபதி – சிவயோகம் இணையரின் அன்பு மகனும் அருளாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் யாழினி (தமிழ்நாடு), எழிலினி (தமிழ்நாடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அரசேந்திரன் (தமிழ்நாடு), சம்பத்குமார் (தமிழ் நாடு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற யோகேந்திரன், இந்திராணி மற்றும் பாலேந்திரா (கொழும்பு), விஜயேந்திரராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவானந்தன் (ஈழநாடு) மற்றும் சண்முகசாமி (கொழும்பு, இலங்கை மத்திய வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகேஷ், நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் புனிதவதி, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை, கணேசமூர்த்தி, விக்னேஸ்வரன் (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு அத்தானும் இளங்கோ, சேரன், மோகன், தயாளன் ஆகியோரின் பெரியப்பாவும் பாலக்கண்ணன், பாலமுரளி, மீரா, யசோதை, இராதை, ஆரூரன், குமரன், கோகிலா ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் இரா.உத்தமசோழன், மருத்துவர் இரா.தமிழ்க்காவிரி, தமிழழகன், பொழிலன் ஆகியோரின் பாட்டனாரும், திகழ்மாறனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு விபரம்:
பார்வைக்கு: Ajax Crematorium & Visitation Center, 384 Finley Ave, Ajax, Ontario, L1S 2E3.

04 /05/2024, சனிக்கிழமை மாலை 5.00 – இரவு 9.00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு
05/05/2024 ஞாயிறுக்கிழமை மதியம் 12.00 – மாலை 4.00 வரை
இறுதி நிகழ்வும் தகனமும் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு:
**கண்ணன் - 647-657-8566**
**விஜிதரன் - 647-783-3466**
**திரு. சிறி - 416-893-9545**

குறிப்பு : மாமனிதர் ஈழவேந்தன் அவர்கட்கு அனைத்து தேசிய மரியாதையுடன் இறுதி வணக்க நிகழ்வு சனிக்கிழமை அன்று நடைபெறும்.

இதில் அனைத்து தமிழ் மாந்தர்களும் வேற்றுமைகள் களைந்து ஒன்றுபட்டு விடை கொடுத்து வணக்கம் செலுத்த வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு : நினைவுரை ஆற்றவிரும்புவோர் முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ஈழம் வெல்லும். அதைக் காலம் சொல்லும்.**